


அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற முதலாவது பட்டமேற்பு விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேருரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

### நிவேதா எம்.முருகன் வரவேற்புரை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமை!

# மயிலாடுதுறை மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன் இல்ல திருமண விழா!

### அமைச்சர்கள் கோவி.செழியன் – சி.வி.கணேசன் – டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

மயிலாடுதுறை. ஏப்.4 -

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா கீழே பெரும்பள்ளம் கழகத் துணைச் செயலாளர் மு.ஞானவேலன் மலர்விழி இணையரின் மகள் ஜி.அட்சயா, மயிலாடுதுறை மாவட்டம் திருவிழந்தூர் எஸ்.கோவிந்தராசு சித்ரா இணையரின்மகன் ஜி. ஸ்ரீதர் இவர்களின் திருமணம் 7.4.2025 திங்கட்கிழமை காலை 9.00 மணி அளவில் மயிலாடுதுறை சிக்னேச்சர் மஹாலில் நடைபெறுகிறது.

திருமண விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வரவேற்பு உரையாற்றுகிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன், மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில முதன்மை ஒப்பந்தக்காரர் முத்து.தேவேந்திரன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், செம்பனார் கோயில் ஒன்றிய கழக செயலாளர்கள் வடக்கு பி.எம்.அன்பழகன், தெற்கு எம்.அப்துல் மாலிக், மத்தியம் அமிர்த.விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

திருமணத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன் தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார்.

மணமக்களை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

இதில் தாட்கோ தலைவரும் மாநில இளைஞரணி துணை செயலாளர் நா. இளையராஜா, முன்னாள் அமைச்சர் உ மதிவாணன், தொமுச பொதுச் செயலாளர் மு. சண்முகம், மாநில மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குனர் ஜெய. ராஜமூர்த்தி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சே ராமலிங்கம், தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம், தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை. சந்திரசேகரன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.அண்ணாதுரை, நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், திருவாரூர் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே கலைவாணன்,

மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க. அன்பழகன், காரைக்கால் மாநில திமுக அமைப்பாளர் ஏ.எம்.எச்.ராஜிம், கும்பகோணம் நகர கழக செயலாளர் மேயர் சுப.தமிழழகன், மாநில மாணவர் அணி துணை செயலாளர் மன்னன் த. சோழராஜன், .தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், மாநில விவசாய அணி இணை செயலாளர் எஸ். கே. வேதரெத்தினம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீரபாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என்.விஜயபாலன், கி. சத்தியசீலன், எம். எம்.சித்திக், நாகை அசோகன், எம்.பன்னீர்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ஜி. என் ரவி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தனி பாதுகாப்பு முன்னாள் அதிகாரி ஜி.பி.பாண்டியன், அரசு வழக்கறிஞர் ராம சேயோன், டாக்டர் வீரபாண்டியன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, முன்னாள் மத்திய அமைச்சர் மணிசங்கர்ஐயர், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார்,

மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி சீனிவாசன், துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகி கண்ணீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர் தலைமை செயல் குழு உறுப்பினர் ப கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், இல. மேகநாதன், மறைமலை, திருவாரூர் மாவட்ட துணை செயலாளர் எம் எஸ் கார்த்திக் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், நகர கழக செயலாளர்கள், பேரூர் கொலை செயலாளர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அவர்களின் முன்னாள் பிரதிநிதிகள் நகர்மன்ற பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொள்கின்றனர் முடிவில்கீழ பெரும்பள்ளம் கிளைக் கழக செயலாளர் கு ஆரோக்கியசாமி நன்றி கூறுகிறார்.

### தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோவை விமான நிலையத்தில் – அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில்

# ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் பிரமாண்ட வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் – தொ.அ.ரவி – தளபதி முருகேசன் அறிவிப்பு!







கோவை, ஏப். 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் நாளை (5.4.2025 - சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை புரிந்து, நீலகிரி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள செல்கிறார்.

தமிழ்நாடு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் கோவை விமான நிலையத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பிரம்மாண்ட மான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதுசமயம் இவ்வரவேற்பு நிகழ்வில், மாவட்டக்கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், துணை மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலத்தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து உள்ளாட்சிபிரதிநிதிகள், நகரக்கழக, ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர்க்கழக, வட்டக் ககழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகர,ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள்,BLA2(பாக முகவர்கள்), BLC பூத் கமிட்டி உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக் ex.எம்எல்ஏ. தொ.அ.ரவி, தளபதி முருகேசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்,



கழகத் தலைவர் – முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு மாநகர் மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் இராமநாதபுரம் பகுதி திமுக,புலியகுளத்தில் உள்ள அன்னை தெரசா காப்பகத்தில் உள்ள ஆதரவற்றோருக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் அனைவருக்கும் உணவு வழங்கினார். துணை அமைப்பாளர் லாரா பிரேம்தேவ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் துணை அமைப்பாளர்கள் கோவை அருண், துரை,பிரவீன், க.மணிகண்டன் மாவட்டத் துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி செயலாளர் ப.பசுபதி, முருகன்,நவீன்முருகன் பாலமுருகன், தேவசீலன், கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பொன்னமராவதியில் பேருந்து நிலையம் முன்பாக ஒன்றிய, நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற நூறு நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றியச் செயலாளர் அ.அடைக்கலமணி தலைமையிலும், பேரூர் செயலாளர் அ.அழகப்பன் முன்னிலையிலும் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், வேந்தன்பட்டி இளையராஜா, வெங்கடேசன், ஆலவயல் அழகப்பன், சுந்தரி ராமையா, முத்தையா, ஆலவயல் சுவாமிநாதன், ஆலவயல் முரளி சுப்பையா, காளிதாஸ், விகாஷ், சுரேஷ், கோவை ராமன், ஜெயக்குமார், இம்ரான், பேரூராட்சி கவுன்சிலரகள், வார்டு செயலாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின், முன்னாள் ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், கழக மூத்த நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கண்ட குரல் எழுப்பினர்.

# ஆதிக்க மொழிமுகத்தை அசைத்திருக்கிறது தமிழ்நாடு!

## ‘கணையாழி’ தலையங்கம்!

ஆட்சிமொழி அதிகாரத்தில்
முகம் இழந்த மொழிக்காரர்கள்
தமிழ்நாடு முதலமைச்சரின்
முன்னெடுப்பில்
விழித்துக்கொண்டு வருகிறார்கள்!

மொழிகளின் முகத்தை
வளர்த்தெடுக்கிறார்கள் படைப்பாளர்கள்!
வரலாற்றுக் காலந்தொட்டு
மக்களின் அறிவு முகத்தை
மாற்றிக்கொண்டு வருகின்றன.
மொழிகள்!

மறைந்து கிடக்கும் மனதை
வெளிப்படுத்த வந்த
மொழிகளைக் கொண்டே
மனதை மறைக்கிறார்கள்!

நடந்ததைச் சொல்ல வந்த மொழிக்கு
நடக்காததைச் சொல்லக் கற்றுத்
தருகிறார்கள்.
இருப்பதைச் சொல்லவந்த மொழியை
இல்லாததைக் கற்பிக்கப்
பழக்கப்படுத்துகிறார்கள்!
காலப் பெட்டகத்தின் கருத்துக் கருவூலத்
திறவுகோல் மொழிகளை
ஆட்சிமொழி இந்திதான் என்று
அதிகாரச் சிறையில் அடைக்கப்
பார்க்கிறார்கள்!

சேர்ந்து வாழக் கண்டடைந்த
மொழியில் உயர்வு தாழ்வு பேசி
பிரிவினை செய்கிறார்கள்!

முன்பே சீராக இல்லாத ஒன்றை
மறுசீரமைக்க மல்லுக்கட்டுகிறார்கள்!
ஜனநாயகம் என்பது அனைவருக்கும்
சம உரிமை மட்டுமில்லை
மாநிலங்களுக்கும் சம உரிமை! ]

ஒரு நாடு என்பது
ஒரு மொழி வழங்கும்
பகுதி மட்டும் என்பது இல்லை!
ஒரே மொழி பேசும் நாடுகள்
ஒரே நாடாக இல்லை.

ஒரு நாடு என்பது பரப்பளவால்
தீர்மானிக்கப்படுவதில்லை!
ஏனெனில் நாடுகளின் எல்லைகள்
ஆயுதங்களின் கைகளில்!
ஒரு நாடு என்பது
ஒரே மத நம்பிக்கையில் இல்லை!
ஏனெனில்
ஒரே மதத்தைப் பின்பற்றுகின்ற
பாகிஸ்தானும் வங்காள தேசமும்
வெவ்வேறு நாடுகள்!

இந்தியா, ஆங்கிலேயர் காலத்தில்
மூன்று மாகாணங்கள்!
விடுதலை இந்தியா –
மாநிலங்களின் ஒன்றியம்!
அப்படியானால்
மாநிலங்களை எப்படிப் பிரித்தார்கள்?
பரப்பளவு கொண்டா?
மத நம்பிக்கை கொண்டா?
மக்கள் தொகை கொண்டா?

மக்கள் தொகைக்கு ஏற்பப் பிரித்திருந்தால்
நாடாளுமன்ற உறுப்பினர்கள்
எண்ணிக்கையைப் போல
மாநிலங்களின் எண்ணிக்கையையும்
மறுசீரமைப்பு செய்ய வேண்டுமே!
அதற்குப் பதிலாக
மாநிலங்களை மறுசீரமைப்பு செய்யாமல்
மாநிலங்களின்
நாடாளுமன்றத் தொகுதிகளின்
எண்ணிக்கையை
மறு வரையறை செய்கிறார்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர்களின்
எண்ணிக்கைக் கணக்குதான்
இந்தியாவின் தலையெழுத்தைத்
தீர்மானிக்கும் என்பதால்
அதிக எண்ணிக்கை கொண்ட
மாநிலங்களுக்கே அதிக அதிகாரம்!
அதிக அதிகாரம், மற்றவர்களை
அடக்கி வைக்கத் தூண்டாதா?

இந்தியாவை மொழிவழி மாநிலங்களாகச்
சீரமைத்துவிட்டு,
மாநில ஆட்சிமொழியைத் தீர்மானிக்கும்
அதிகாரத்தையும் தந்துவிட்டு
மக்கள் தொகை கணக்கில்
மொழிகளின் உரிமைகளா?

ஆகவே, இந்தியா –
மாநிலங்களின் ஒன்றியம் என்பதை
உறுதி செய்யவும்
எல்லா மாநிலங்களுக்கும்
சமமான உரிமை என்பதை
நடைமுறைப்படுத்தவும்
மக்கள் தொகை, பரப்பளவு,
மத நம்பிக்கைகளைப் பார்க்காமல்
எல்லா மாநிலங்களுக்கும்
நாடாளுமன்றத்தில்
ஒரே அளவிலான வாக்குரிமைக்கு
அரசியல் அமைப்புச் சட்டத்தில்
வழிகாண வேண்டாமா?

“மொழிவழி பிரித்தாளும்
எண்ணம் ஈடேறாது” என்றும்
ஆட்சி மொழித்துறையில்
இந்திய மொழிகள் பிரிவைப்
பிரதமர் மோடி
உருவாக்கியிருப்பதாகவும்
சொல்லியிருப்பதோடு
இந்தி மொழி எந்த மொழிக்கும்
போட்டி இல்லை என்றும்
இந்திய மொழிகளோடு அது
இணக்கமான மொழி என்றும்
இந்திய மொழிகள் வளம்பெற
உதவியதோடு இந்திய மொழிகளால்
வளம்பெற்ற மொழி என்றும்
இந்திக்குப் பாமாலை பாடியிருக்கிறார்
ஒன்றிய அமைச்சர் அமித்ஷா!
ஆனால் இந்திய ஒற்றுமைக்கு
ஆட்சிமொழி இந்திதான் சிக்கல் என்பது
இப்போதுதான் தெரிய வந்திருக்கிறது
ஒன்றிய அரசுக்கு!
“வரும் டிசம்பர் முதல்
பொது மக்களோடும்
முதலமைச்சர்களோடும்
நாடாளுமன்ற உறுப்பினர்களோடும்
அவரவர் தாய்மொழியில் எழுத்து
வழியாகவே
தொடர்புகொள்ளப் போவதாக’’
உள்துறை அமைச்சர் அமித்ஷா
உறுதி அளித்திருக்கிறார்!

மாநிலங்கள் அவையில்!
ஆம்!
அவரவர் தாய்மொழியில்
ஒன்றிய அரசோடும் மக்கள்
உரையாட வேண்டியே
போராடி வருகிறது தமிழ்நாடு!

அவரவர் தாய்மொழியில்
அரசின் நடவடிக்கை என்றால்
இந்தியைப் போல
அட்டவணை மொழிகள் அனைத்துமே
ஆட்சிமொழிகள் தாமே!
இந்தியும் ஆட்சி மொழி என்ற
அதிகாரம் இழந்து
மற்ற மொழிகளைப்போல
அலுவல் மொழி ஆகட்டும்!
அதற்கு வழிகாட்ட மும்மொழிக் கொள்கை
முகமூடியைக் கிழித்து
இந்தித் திணிப்பை இனம் காட்டி
எதிர்த்து நிற்கிறார் தமிழ்நாடு முதல்வர்!
அதனால் இப்போது
முகம் மாறி வருகிறது
ஒன்றிய அரசு!
ஆம்!
ஒன்றிய அரசின்
ஆதிக்க மொழிமுகத்தை
அசைத்திருக்கிறது தமிழ் நாடு!



ம.ரா.

–நன்றி
கணையாழி!
ஏப்ரல் – 2025